# மெட்ரோ ரயில் நேரம் இன்று முதல் நீட்டிப்பு

**சென்னை, மார்ச் 30–**

மெட்ரோ ரயில் நேரம், இன்று முதல் நீட்டிக்கப்படுகிறது. காலை, 4:30 மணியில் இருந்து, இரவு, 11:00 மணி வரை ரயில்கள் இயக்கப்படுகின்றன.



சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை மற்றும் பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில், விமான நிலையத்தில் இருந்து, ஆலந்துார், கோயம்பேடு வழியாக சென்ட்ரலுக்கும் செல்லலாம். ரயில்கள் காலை, 5:54 மணியில் இருந்து, இரவு, 10:08 மணி வரை இயக்கப்பட்டன.

ரயில்கள் இயக்க நேரம், இன்று முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதிகாலை, 4:30 மணியில் இருந்து, இரவு, 11:00 மணி வரை இயக்கப்படும்.

காலை, 8:00 மணி முதல், 11:00 மணி வரையும், மாலை, 5:00 மணியில் இருந்து, 8:00 மணி வரையும், 5 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில், 7 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படும்.

இந்த நீட்டிப்பு நேரம், திங்கள் முதல் சனிக்கிழமை வரை பொருந்தும். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும், காலை, 7:58 மணியில் இருந்து இரவு, 10:01 வரை மட்டுமே ரயில்கள் இயக்கப்படும் என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.